**ஜா-எல நகர சபை**
**கம்பஹா மாவட்டம்**

-------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 13 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூலை 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 21 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஜா-எல நகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 690,000 தொகையான 02 டேலர்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் ஆண்டிற்குரியதாக மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது தவறை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | கம்பெக்டர் வாகனத்தின் செலுத்தி முடிவுறுத்தப்படாத ரூபா 12,998,400 தொகை மூலதனமாக்கப்பட்டமையினால் அந்த அளவினால் நிலையான சொத்துக்கள் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 ஆகஸ்ட் 20 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் உரிய சொத்துக்களின் மொத்த செலவின பெறுமதியும் மூலதனப் பெறுமதியும், கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், பகுதியாக தவணைப் பணம் செலுத்தும் போது ஏற்படுத்தப்பட்ட பொறுப்புக் கணக்கில் அதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | இணையாக தீர்வு செய்யப்பட்டிருந்தது என்பதை அறியத்தருகின்றோம். |
| (இ) | மீளாய்வாண்டின் இருப்பாக ரூபா 11,408,112 புத்தக பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தேவையான சீராக்கங்களைச் செய்து பௌதீக இருப்பு கணக்கு வைக்கப்பட வேண்டும். | களஞ்சிய பௌதீக இருப்புக்களிலும் பிரதான பேரேட்டின் இருப்பு மீதிகளிலும் உள்ள சீராக்கமின்மைகளுக்காக பதிவேடுகள் பரீட்சிக்கப்பட்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்காகவும், முன்னைய வருடத்திற்காகவும் கிடைக்க வேண்டிய ஆதனக் கடன் வட்டி மற்றும் பட்டதாரி பயிலுனர் படிகள் ரூபா 368,464 கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019 செப்தெம்பர் 19 ஆம் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் LGD/01/D/2019/05 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கணக்கு வைக்கப்பட வேண்டும். | அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்படாமல் பெறுவனவு அடிப்படையின் கீழ் கணக்கு வைப்பதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள 03 கணக்கு விடயங்களின் மீதிகளுக்கும், பட்டோலைகளின் பிரகாரமான மீதிகளுக்கும் இடையே ரூபா 9,114,298 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகள் இணக்கஞ் செய்யப்பட்டு கணக்குகள் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பற்றாக்குறைகள் பதிவேடுகள் பரீட்சிக்கப்பட்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

### 1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுகளில் இருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,110,620 தொகையான பெறவேண்டிய மின்சாரக் கட்டணக் கணக்குகளின் மீதியை அறவிடுவதற்கோ அல்லது தேவையான சீராக்கங்களைச் செய்து கணக்குகளில் சரி செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு அல்லது தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | முன்னைய ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட 25 வேலைகளுக்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 6,691,399 தொகையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (இ) | வாடிக்கையாளரிடம் இருந்து பெறப்பட்டு மதிப்பிழந்திருந்த 04 காசோலைகளுக்குரிய ரூபா 32,007 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அதில் 09 வருடங்களை விஞ்சிய ரூபா 22,404 தொகையான காசோலையும், 05 வருடங்களை விஞ்சி காணப்பட்ட ரூபா 7,353 தொகையான காசோலையும் காணப்பட்டன. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 872.63 காசோலை 2020 சனவரி 22 ஆம் திகதி அறவிடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 45,225,743 கூட்டுத்தொகையான 02 கணக்கு விடயங்களுக்கான நிலுவை வருமான அறிக்கை மற்றும் காலப்பகுப்பாய்வு என்பன கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

### 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சேஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) நிதிப் பிரமாணம் 104 | மீளாய்வாண்டின் பொருள் மெய்மெய்வாய்வில் வெளிப்படுத்தப்பட்ட பல்வேறு பற்றாக்குறை தொடர்பாக பரீட்சிக்கப்பட்டிருக்க வில்லை. | பொருள் மெய் மெய்யாய்வில் வெளிப்படுத்தப்பட்ட பற்றாக்குறை தொடர்பாகவும், பொருட் பதிவேட்டின் பற்றாக்குறை தொடர்பாகவும் பரீட்சித்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 371(2) | மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 1,132,826 தொகையான 21 முற்பணங்கள் மற்றும் 2012 ஆம் ஆண்டு முதல் 2015 வரை | முற்பணம் உரிய பணிகள் நிறைவு பெற்றதும் உடனடியாக தீர்த்து வைக்கப்பட வேண்டும். | ரூபா 424,608 தொகையை தற்போது தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்கப்பட்ட ரூபா 158,749 தொகையான 02 முற்பணங்கள் என்பவற்றை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | நிதிப் பிரமாணம் 571 | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 2,962,935 தொகையான வைப்புத் தொகையை ஓய்வுபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 2,962,935 தொகை 2020 ஆம் ஆண்டின் போது வருமானத்திற்கு எடுத்து வைப்பு பதிவேட்டில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

## 1.5 போதியளவான அதிகார பலத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வெறுமையான மற்றும் உடைத்து அகற்றுதலாக நிலுவை ஆதன வரி ரூபா 793,581 தொகை கிராம சேவகர் பரிந்துரையின்றி பதிவழிக்கப்பட்டிருந்தது. | கிராம சேவகரின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | வருமான பரிசோதகர் வழங்கிய அறிக்கையின் வெளிப்படைத்தனமையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கணக்காய்வின் மூலம் பின்தொடர் நடவடிக்கைகளைச் செய்தல் மற்றும் பிரதேச செயலாளருக்கு அறிவித்து வேலைத்திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

# 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 41,081,341 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 51,255,753 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | வீதவரியும் வரியும் | 45,250 | 44,157 | 28,361 | 28,292 | 42,950 | 44,211 | 27,602 | 23,558 |
| (ii) | வாடகை | 10,055 | 10.464 | 10,464 | 684 | 9,337 | 9,624 | 9,624 | 567 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 952 | 997 | 997 | 7 | 738 | 1,166 | 1,166 | 7 |
| (iv) | ஏனைய வருமானம் | 86,460 | 47,756 | 47,756 | 3,494 | 94,614 | 50,626 | 50,626 | 3,494 |
| | | 142,717 | 103,374 | 87,578 | 32,477 | 147,639 | 105,627 | 89,018 | 27,626 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வருமானமான ரூபா 26,588,683 தொகையில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 1,453,534 மீதியும் காணப்பட்டது. | நிலுவை வருமானத்தை உரிய பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பொதுச் சந்தையில் காணப்பட்ட மாட்டிறைச்சிக் கடை 2019 ஆம் ஆண்டிற்காக கேள்விகோரும் போது எந்தவொரு கேள்வியும் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக பொதுக் கூட்டத்தின் அவசர தீர்மானத்தில் அந்த கேள்வி விலை 10 | வருடாந்த மதிப்பீட்டுத் திருத்தம் மதிப்பீட்டு திணைக்களத்தின் அங்கீகாரத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். | கேள்விச் சபையின் பரிந்துரை மற்றும் சபையின் அங்கீகாரத்தின் கீழ் கேள்வி விலையில் 10 வீதம் குறைக்கப்பட்டு 2018 செப்தெம்பர் 25 ஆம் திகதி முதல் 2018 ஒக்தோபர் 09 ஆம் திகதி வரையான காலத்தில் கேள்வி கோரப்பட்டிருந்த போதும், கேள்விதாரர் ஒருவர் |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதத்தால் குறைக்கப்பட்டிருந்ததுடன் மீண்டும் அதே தினம் அவசர தீர்மானத்தினால் 15 சதவீதம் வரை குறைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருடாந்த கேள்விப் பெறுமதியை 2018 உடன் ஒப்பிடும் போது ரூபா 371,275 இனாலும், மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட மதிப்பீட்டு பெறுமதியை விட ரூபா 167,665 இனாலும் குறைவடைந்திருந்தது. | | முன்வராதிருந்ததுடன், 2018 ஒக்தோபர் 12 ஆம் திகதி 15 சதவீதம் குறைக்கப்பட்டு மீண்டும் கேள்வி கோருவதற்கு சபை தீர்மானம் எடுத்துள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | பொதுச் சந்தையின் 40 ஆம் இலக்க பன்றி இறைச்சிக் கடைக்காக 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,034,000 தொகையில் வாடகைக்கு வழங்கும் போது உடன்படிக்கையில் கைச்சாத்திடாமையினால் மீண்டும் விலைகளை குறைத்ததன் பின்னர் இறுதியாக இணங்கிய விலை ரூபா 721,200 ஆக இருந்ததுடன் ஆரம்ப விலையுடன் ஒப்பிடும் போது ரூபா 312,360 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. | கேள்வி கையளிக்கப்பட்டதன் பின்னர் கேள்விதாரருடன் உடன்படிக்கை கைச்சாத்திட வேண்டியிருந்ததுடன் வருடாந்த மதிப்பீட்டு திருத்தம், மதிப்பீட்டு திணைக்களத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும். | 10 சதவீதம் குறைக்கப்பட்டதன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஒரே ஒரு கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டு கேள்விதாரருக்கு தேவையான தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு உடன்படிக்கை செய்யும் வகையில் அறிவித்து அனுப்பப்பட்டிருந்த போதிலும் அவர் அதற்கு முன்வரவில்லை என்பதை அறியத்தருகின்றோம். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2000 யூன் 06 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட டொயட்டா வகையின் வான் வண்டி 2015 மார்ச் 19 ஆம் திகதி விற்றுத் தீர்ப்பதற்கு பொருத்தமானது என பரிந்துரை செய்யப்பட்டிருந்த போது 2017 ஆம் ஆண்டில் | பழுதுபார்ப்பதற்காக ஏற்படுகின்ற செலவினங்கள் பொருளாதார ரீதியில் ஆக்கபூர்வமானதாக இருக்க வேண்டும். | பழுதுகள் தொடர்பாக நிலைமையினை திருத்துவதற்கு இந்த வாகனத்தின் முகவர் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு ரூபா 1,461,300 மதிப்பீடொன்று பெறப்பட்டதுடன் அந்த மதிப்பீட்டின் பிரகாரம் பழுதுபார்த்தல்கள் இது |

| | | | |
|---|---|---|---|
| | எஞ்சின் மற்றும் ஏனைய பழுதுபார்த்தல் என 17 பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டு ரூபா 1,147,909 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அத்திகதி முதல் 2019 ஆகஸ்ட் வரை ரூபா 501,322 தொகையான பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. சாரதியினால் வாகனத்தின் என்ஜின் ஒயில் கசிவு மற்றும் ஓல்டனேட்டர் செயலிழந்தமை என 13 பழுதுகள் உள்ளதாக காண்பிக்கப்பட்டு பழுதுபார்த்து தருமாறு வழங்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் மீண்டும் 87 விடயங்களுக்கு ரூபா 1,461,300 தொகையான மதிப்பீடொன்று முகவராண்மை நிறுவனத்திலிருந்து 2019 மே 08 ஆம் திகதி பெறப்பட்டிருந்தது. | | வரை மேற்கொள்ளப்படவில்லை. |
| (ஆ) | சபையினால் உரிமை கோரப்படுகின்ற செக்குவத்தை விளையாட்டு மைதானத்திற்கு உரிய 18 நிலப் பகுதிகளை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் உரிமை கோரப்படுகின்ற நிலப் பகுதிகளின் சட்ட ரீதியான உரித்தை சபைக்கு சொந்தமாக்கிக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அந்த காணிப் பகுதிகள் பிரதேச செயலகத்தின் மூலம் இரண்டாவது தடவையாக நில அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொள்வதற்காக மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஏப்ரல் 01 முதல் 2019 மே 23 வரை 02 மோட்டார் கிரேடர்கள் கழிவுப் பொருட்களை பரவும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அக்காலப் பகுதியில் அதில் ஒரு மோட்டார் | பணிகளை நிறைவேற்றும் போது அதிகாரமளிக்கப் பட்ட உத்தியோகத்தர் | 2020 மார்ச் 12 ஆம் திகதி சபையின் மூலம் சகல கொடுப்பனவுகளும் சரிசெய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

| | | |
|---|---|---|
| கிரேடர் நாளொன்றுக்கு 10 மணித்தியாலங்களை விஞ்சி 37 நாட்களும், மற்றைய மோட்டார் கிரேடர் நாளொன்றுக்கு 10 மணித்தியாலங்களை விஞ்சி 06 நாட்களும் கழிவுப் பொருட்களை பரவும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. 10 – 21 மணித்தியாலங்களுக்கு இடையில் அசாதாரணமான மணித்தியால எண்ணிக்கை நாளாந்தம் அந்த இரண்டு இயந்திரங்களும் ஒரே தடவையில் கழிவுப் பொருட்களை பரவும் நடவடிக்கைகளில் 32 நாட்கள் ஈடுபட்டிருந்த போதிலும் அதில் ஒரு நாளைக்கு அகற்றப்பட்ட சராசரியான கழிவுப் பொருட்களின் அளவு 03 டெக்டர் லோட் ஆக இருந்தது. 2019 மே 14 ஆம் திகதி முதல் மே 20 வரையான 07 நாட்களில் மொத்த மணித்தியாலங்கள் 132 இற்காக ரூபா 745,500 தொகை 02 மோட்டார் கிரேடர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் அக்காலப் பகுதியில் கழிவுகளை அகற்றும் நிலையத்திற்கு கழிவுப் பொருட்கள் கொண்டு செல்லப்பட்டிருக்கவில்லை. | களின் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட வேண்டும். | |

**3.3 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 செப்தெம்பர் 29 ஆம் திகதி பெறப்பட்ட பேலிங் இயந்திரம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**3.4 பெறுகைகள்**

**3.4.1 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 18 ஆம் திகதி நடைபெற்ற கணக்குகள் | செயற்திட்டங்களை அமுல்படுத்தும் போது உரிய | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | செயற்குழுவினால் நகர சபைக்கு வழங்கப்பட்ட கட்டளைகளின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் ரூபா 1,130,435 செலவில் செக்குவத்தை விளையாட்டு மைதானத்தில் நிர்மாணிக்கப்பட்ட கூடைப் பந்து விளையாட்டு மைதானத்தை பயன்படுத்தக்கூடிய நிலைமைக்கு கொண்டுவருதவற்காக இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருகக்வில்லை. | நியமங்களுக்கு இணங்க பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன், கணக்குகள் செயற்குழுவின் கட்டளையை சரியான பிரகாரம் அமுல்படுத்தி உரிய சொத்துக்களை பயன்படுத்திக் கொள்ளும் நிலைமைக்கு கொண்டுவருவதற்கு சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (ஆ) | வெளிவாரி நிதி ஏற்பாட்டின் கீழ் 03 வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 2,519,036 பெறுமதியில் பதிவுசெய்த சங்கங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தன. இந்த வீதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவேற்றப்படாதிருக்கும் போது அவை பூர்த்திசெய்யப்பட்டதாக கொடுப்பனவு அறிக்கை தயாரித்து பிரதேச செயலாளரிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நிறைவேற்றப்படாத செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதாக காண்பித்து பணம் கோருதல் பொருத்தமற்றதாகும். | கொடுப்பனவு அறிக்கையுடன் உறுதிச் சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு பிரதேச செயலாளருக்கு 2018 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் நிதி ஏற்பாட்டை சபைக்கு பெற்றுக்கொள்ளும் நோக்கில் அனுப்பப்பட்டிருந்ததுடன் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை அறியத்தருகின்றோம். |
| (இ) | சுதுவெல்ல கூட்டுப்பசளை தளத்தில் உள்ளக வீதிகளை அபிவிருத்தி செய்யும் III ஆவது கட்டத்திற்காக ரூபா 2,500,000 நிதிஏற்பாட்டின் அடிப்படையில் நிறைவேற்றுவதற்காக ஒப்பந்தம் கையளிக்கப்படாதிருந்த போது வீதியில் ABC இடப்பட்டு அதில் மண் நிரப்பி, வீதிக்கு அருகில் சீமெந்து கற்கள் குவிக்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கை செய்ததன் பின்னர் வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |